கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி அகஸ்தியர் பட்டியில் அம்பை நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சரவண சக்திவேல் ஏற்பாட்டில் மாநில அளவிலான கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பரிசு கோப்பைகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ராஜவர்மன்,மாவட்டத் துணைச் செயலாளர் மாஞ்சோலை மைக்கேல்,ஒன்றிய செயலாளர் பரணிசேகர்,வி. கே.புரம் நகர செயலாளர் கி.கணேசன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் அருண் தவசுப்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக போட்டியை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் துவக்கி வைத்தார்.

திருச்சி தெற்கு மாவட்டம், கிழக்கு மாநகரம், அரியமங்கலம் பகுதிக் கழகம் சார்பில், கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் கருத்தரங்கம் திருச்சியில் நடை பெற்றது. இதில் ரெங்கநாதன் வரவேற்றுப் பேசினார். ஏ.எம்.ஜி. விஜயகுமார் தலைமை தாங்கினார். அமைச்சரும் தெற்கு மாவட்ட செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநகர செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். வண்ணை அரங்கநாதன், கே. என்.சேகரன், சபியுல்லா செங்குட்டுவன், லீலாவேலு, மூக்கன் திவ்யா, நூர்கான், சந்திரமோகன், பொன்செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வன் நீலமேகம், தர்மராஜ், ராஜ்முகம்மது, மோகன், மணிவேல், பாபு, சிவக்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியில்

கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் திட்டப் பணிகள்!

அமைச்சர் பி. மூர்த்தி தொடங்கி வைத்தார்!

மதுரை, மார்ச் 13-

மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று மக்களை சந்தித்து மனுக்களை பெற்ற வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி 115 முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தார்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இன்று மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கிழக்கு ஊராட்சி ஒன்றிய பகுதியில் கிராமம் கிராமமாக சென்று பொதுமக்களை சந்தித்து சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் மற்றும் நிறைவுற்ற பணிகளை திட்டப் பணிகளை துவக்கி வைத்தார்.

அதன்படி மாங்குளம் ஊராட்சிக்குட்பட்ட மாங்குளம் கிராமத்தில் 40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி, சின்ன மாங்குளம் கிராமத்தில் 27 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி என பொருசுப்பட்டி, குருத்தூர், கீழ்க்கள்ளந்திரி, கள்ளந்திரி, பொய்கைக்கரைப்பட்டி, மாத்தூர் என 37 பகுதிகளில் நியாய விலை கடைகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் என 20.72 கோடி மதிப்பீட்டிலான 115 முடிவுற்ற திட்ட பணிகளை நேரடியாக சென்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

மேலும் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அனைத்து இடங்களிலும் சிறப்பு மக்கள் தொடர்பு முகாம் மூலம் அப்பகுதி மக்களிடம் கோரிக்கை மனுக்களையும் பெற்று அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளை அறிவுறுத்தி சென்றார்.

இந்நிகழ்வில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, கிழக்கு ஒன்றிய ஆணையாளர் கதிரவன், முன்னாள் ஒன்றிய சேர்மன் மணிமேகலை ராஜேந்திரன், திமுக நிர்வாகிகள் வக்கீல் கலாநிதி, வடிவேல் முருகன், மதிவாணன், ஒத்தக் கடை சரவணன் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

அமைச்சர் சுற்று பயணத்தின் போது சின்ன மாங்குளம் கிராமத்தில் பொதுமக்களை சந்தித்தார், அப்போது சின்னமாங்குளம் ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் காலனி பகுதி மக்கள் தங்கள் பகுதியில் நியாய விலை கடைக்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் உள்ளதாக தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து உடனடியாக அப்பகுதிக்கு சென்ற அமைச்சர் பி.மூர்த்தி அதிகாரிகளை வைத்து கட்டிடத்தை திறந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததுடன், ஒரு சில தினங்களில் திறக்கப்பட்ட நியாய விலை கடை மூலம் பொது மக்களுக்கு குடிமைப் பொருட்கள் விநியோகம் செய்ய வேண்டும் என அறிவுறுத்திச் சென்றார் அமைச்சர் பி.மூர்த்தியின் இந்த உடனடி நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்

தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாகரிகமற்றவர்கள் என்பதன் மூலம்

8 கோடி தமிழர்களை தர்மேந்திரபிரதான் அவமதித்துள்ளார்!

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!

சென்னை, மார்ச் 13 -

விவசாயிகள் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன். குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை நாகரிகமற்றவர்கள் என்று கூறியதன் மூலம் 8 கோடி தமிழ் மக்களை ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரபிரதான் அவமதித்துள்ளார். இதற்கு அவர் உடனடியாக தமிழ்நாட்டு மக்களிடம் தனது மன்னிப்பை பகிரங்கமாக்க கோர வேண்டும். அவரது கூற்று ஆணவத்தின் உச்ச வெளிப்பாடாகும்.

மும்மொழி கொள்கை பிரச்சனை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் வந்த பொழுது மும்மொழி கொள்கையை எதிர்த்து தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக விவாதித்தனர். அப்போது பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் ஏற்கனவே

மும்மொழி கொள்கையை ஒப்புக்கொண்டு இப்போது பின் வாங்குவதாக ஒரு பொய்யை அவையில் தெரிவித்துள்ளார். மும்மொழி கொள்கைத் திட்டம் என்று ஒன்றை அறிவித்த பொழுது அதனுடைய நோக்கம் தமிழ்நாட்டுக்கு தெரியும் என்பதால் நாங்கள் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் தெரிவிப்பதாக தமிழ்நாடு அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இது தமிழ் மொழியை அழிப்பதற்கும்; இந்தி, சமஸ்கிருத மொழி திணிப்பதற்கும் வழிகோலும் என்பதால் மும்மொழிக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்காது என்று திட்டவட்டமாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார். இது குறித்து தான் தொடர்ந்து அவையில் விவாதம் காரசாரமாக நடைபெற்ற நிலையில் தர்மேந்திரபிரதான் அவர்கள் தமிழ்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் நாகரிகமற்றவர்கள் என்று தனது தடித்த நாக்கின் மூலம் அநாகரீகமாகப் பேசியுள்ளார். இந்த செயலுக்கு பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் என்ன சொல்லப் போகிறார்கள்?.

உலகத்தில் 3300 ஆண்டுகளுக்கு முந்தைய மொழி தமிழ் என்பதும், 5500 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் இரும்பை பயன்படுத்தியவன் தமிழன், இரும்பு காலம் தொடங்கியது தமிழ்நாட்டில் இருந்து, அதன் மூலம் உலக நாகரீகத்தின் தொடக்கமாக தமிழ்நாடு உள்ளது என்பதை அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உலகுக்கு அறிவியல் பூர்வமாக அறிவித்துள்ளார். இப்படிப்பட்ட நாகரீக, பண்பாட்டிற்கு சொந்தக்காரர்களான தமிழர்களை நாகரீகமற்றவர்கள் என்று பேசுவது அநாகரீகத்தின் உச்சமாகும். ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் ஒவ்வொரு நடவடிக்கையும் சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாகத்தான் அமைந்து வருகிறது. ஒன்றிய அமைச்சர் என்கிற பதவி போனால் இவர் யார்? என்பதை நாடு தேட வேண்டி வரும். இப்படிப்பட்ட ஒருவர் பாரம்பரியமிக்க தமிழ் மக்களை அவமதிக்கும் வகையில் நாடாளுமன்ற அவையில் பேசியிருப்பது வன்மையானக் கண்டனத்துக்கு ரியது. உடனடியாக மோடி இதற்கான வருத்த த்தைத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு

சுற்றுலாத்துறையில் வளர்ச்சி - மேம்பாட்டுப் பணிகள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சென்னை, மார்ச் 12-

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் பணித்திறனாய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், நேற்று (11.03.2025) சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலயங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர்.கா. மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் வருகை தந்த மாவட்ட சுற்றுலா அலுவலர்களிடம் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

சுற்றுலாத்துறை பொழுது போக்குச் சுற்றுலா, பாரம்பரியச் சுற்றுலா, ஆன்மீகச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அனைத்துவிதமான சுற்றுலாக்களிலும் தமிழ்நாட்டில் சிறப்பான வாய்ப்புகள் உள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் புதிய சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து அவ்விடங்களில் உலகத் தரத்திலான அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ஆலோசிக்கப்பட்டது.

தற்போதுசுற்றுலாப் பயணிகள் சுற்றுலா செல்லும் இடங்களில் நீங்காத அனுபவங்களை அளிக்கும் மலையேறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல், நீர்சறுக்கு, அலைச்சறுக்கு மேற்கொள்ளுதல் உள்ளிட்ட புதிய அனுபங்களை மேற்கொள்ள விரும்புகின்றார்கள். இவை தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாடு, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் கவர்ந்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான விமானப் போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தமிழ்நாட்டில் முழுமையாக உள்ளன.

தமிழ்நாட்டின் மாமல்லபுரம் கடற்கரை கோயில், ரதங்கள் மற்றும் சிற்பங்கள், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், ஐராவதீஸ்வரர் கோயில், தஞ்சை பெரிய கோயில் மற்றும் நீலகிரி பாரம்பரிய மலை ரயில் ஆகியவை 'யுனெஸ்கோ' வால் உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ச.கவிதா, சுற்றுலா ஆணையரக உயர் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உயர் அதிகாரிகள், அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் மற்றும் சுற்றுலாத்துறைப் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சூளகிரி வடக்கு ஒன்றியத்தில்

முதல்வர் பிறந்தநாள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ.- செய்தித் தொடர்பு தமிழன் பிரசன்னா சிறப்புரை!

கிருஷ்ணகிரி, மார்ச் 13-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் பேரிகையில் சூளகிரி வடக்கு ஒன்றிய செயலாளர் கே.நாகேஷ் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஒன்றிய அவைத்தலைவர் ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினார். சீனிவாஸ் கவுடு, பிரவீன் குமார், ராமச்சந்திரன், ராஜப்பா, கெஞ்சப்பா, சித்தம்மா முனி கிருஷ்ணப்பா முன்னிலை வகித்தனர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய். பிரகாஷ், கழகச் செய்தித் தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரை யாற்றினர்.

தமிழன் பிரசன்னா பேசும் போது எத்தனை ஆயிரம் கோடி கொடுத்தாலும் என் பிள்ளைகளுக்கு ஹிந்தி திணிக்க மாட்டேன், 2000 கோடி ரூபாய் இல்லை பத்தாயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று நம்முடைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியிருக்கிறார். நீங்கள் பயணிக்கிற விடியல் பயணத்தில் தமிழ்நாட்டில் உள்ள மகளிர்க்காக நம்முடைய முதல்வர் ஒரு ஆண்டுக்கு 2000 கோடி ரூபாய் கொடுக்கிறார் , 100 நாள் வேலை திட்டத்தில் மோடி பணம் அனுப்ப மறுக்கிறார். இதனால் நம்முடைய தாய்மார்கள் 100 நாள் வேலைக்கு செல்ல முடியாமல் கிராமப் புறத்தில் தவிக்கின்றனர், நம்முடைய முதல்வர் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி அளிக்கிறார்.

மேலும் தமிழ் படித்த மாணவியருக்கு கல்லூரியில் படிக்கும் பொழுது ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். அதே போல மாணவர்களுக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார். வரும் 2026 இல் அவர்தான் முதலமைச்சர் என அவர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சார்வேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரா மணி, வீரா ரெட்டி, பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன்

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுமன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாவட்ட ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஏராளமான கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் நன்றி யுரை ஆற்றினார்.

தென்காசி மாவட்டம் - கடையநல்லூரில்

மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்!

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது!

தென்காசி, மார்ச் 13-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மையம் மற்றும் தொழில் நெறி வழி காட்டும் மையம் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் (8.3.2025) அன்று நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மையம் மற்றும் தொழில் நெறி வழி காட்டும் மையம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு, தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் மகளிர்களுக்காக எண்ணற்ற நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு, திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் தாலிக்குத்தங்கம்,மகளிர் சுய உதவிக்கடன், நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் மாவட்ட வேலை வாய்ப்பு மையம் மற்றும் தொழில் நெறி வழி காட்டும் மையம் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் 2724 கல்லூரி முடித்த மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். அதில்586 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.தேர்வு பெற்ற சகோதர,சகோதரிகள் சம்பளம் குறைவாக உள்ளது என்று வேலையை விட்டு விடாமல் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். இவ்வேலை வாய்ப்பு முகாமில் பணி நியமனம் பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல்கிஷோர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன்,திருநெல்வேலி மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் சண்முகசுந்தர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சையது முகம்மது,இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் மார்த்தாண்ட பூபதி மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேனி தெற்கு மாவட்டம்ஆண்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடமலைமயிலை ஒன்றியம் கண்டமனூர் வடக்குத்தெரு பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிதண்ணீர் தொட்டியை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் திறந்து வைத்தார் உடன் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அண்ணாகிராம ஒன்றியத்தில் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

கடலூர், மார்ச் 13-

பண்ருட்டி சட்டமன்ற தொகுதி, கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசனையின் படி BLC உறுப்பினர்களை கொண்டு கழக DMKITW எனும் வாட்ஸாப் சேனல் பாலோயர்ஸ், சேர்க்கை பணியை துவக்கி வைக்கும் நிகழ்ச்சி பண்ருட்டியில் அண்ணா கிராம ஒன்றிய கழக அலுவலகத்தில் நடைபெற்றது .

இதில் பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் செ. புஷ்பராஜ் தலைமை தாங்கினார், அண்ணா கிராம ஒன்றிய கழக செயலாளர் வி. கே. வெங்கட்ராமன், பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் கே. ராஜேந்திரன், நெல்லிக்குப்பம் நகர செயலாளர் மணி வண்ணன்,

வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தோஷ் குமார், மேல்பட்டாம்பாக்கம் பேரூர் மன்ற தலைவர் ஜெயமூர்த்தி, ஆனந்தி சரவணன், தணிகை செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் மதன குரு, மாவட்ட பிரதிநிதி ராமு (எ) ராமச்சந்திரன், எஸ். வி. ராமர், ஒன்றிய பொருளாளர் ஸ்ரீதர், செந்தில் குமார், ஆனந்த், முகமது பாசில், நாராயணன், தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் த. ஞானவேலு, தமிழன் அருள், இலக்கியா மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் தொடர் 51 நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.அதன் 5வது நிகழ்ச்சியாக மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான் ஏற்பாட்டில் பாளையங் கோட்டை புனித அன்னாள் ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் இரவு உணவு வழங்கும் நிகழ்வு மாநகர தி.மு.க செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை, மாநகராட்சி துணை மேயர் ராஜீ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று உணவு வழங்கினார். நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மாயா,மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் இனியன்,மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர பிரதிநிதி சிவா, தி.மு.க. ஆகியோர் கலந்து கொண்டனர்.